# பாடம் 50: புனிதர்கள் மீதான பக்தி

**விசுவாசத்தைக் கற்பிப்போருக்கான அறிவுறுத்தல்**

| | |
|---|---|
| அடிப்படை நிலை (9 வயது) | : 1 முதல் 13 கருத்துகளைக் கற்பிக்கவும் |
| இடைப்பட்ட நிலை (12 வயது) | : 1 முதல் 16 கருத்துகளைக் கற்பிக்கவும் |
| மேம்பட்ட நிலை (15 வயது) | : 1 முதல் 23 கருத்துகளைக் கற்பிக்கவும் |

**முந்திய பாடத்தில் இருந்து மீள்பார்வை:**
முந்திய பாடங்களில், நாம் திருச்சபையின் திருவழிபாட்டு செபங்கள் மற்றும் பக்திக்குரிய செபங்கள் பற்றி நாம் கற்றோம். நமது பக்திக்குரிய செபங்கள் பலவும் புனிதர்களை நோக்கியதாக இருக்கின்றன என்பதால், இந்த பாடத்தில் குறிப்பாக புனிதர்களுடனான நமது உறவுநிலை பற்றி நாம் கற்போம்.

**தற்போதைய பாடம்:**
1. திருச்சபையின் உறுப்பினர்கள் இறக்கின்ற பொழுது, அவர்கள் ஒரே, தூய, கத்தோலிக்க, திருத்தூதரிய திருச்சபையின் பகுதியாக இருக்கிறதை விட்டு விடுவதில்லை. அவர்களின் ஆன்மாக்கள் நித்தியத்தை கடவுளுடன் செலவிடுவதற்காக தூய்மையாக்கல் (உத்தரிப்புநிலை) செயல்மைக்குள் செல்கின்றன. உடல்சார் இறப்பின் நேரத்தில் ஏற்கெனவே தூய்மையான ஆன்மாக்களை உடையவர்கள், உடனடியாக பேறுநிறை காட்சிக்குள் (விண்ணகத்தில்) நுழைகின்றனர்.

அவர்கள் மண்ணத்தில் இருந்த வேளையில், அவர்கள் போராடும் திருச்சபையின் பகுதியாக இருந்தனர், உத்தரிப்புநிலையில் அவர்கள் துன்புறும் திருச்சபையின் பகுதியாக இருந்தனர், விண்ணகத்தில் அவர்கள் வெற்றிபெற்றத் திருச்சபையின் பகுதியாக இருக்கின்றனர். போராடும் திருச்சபை, துன்புறும் திருச்சபை, மற்றும் வெற்றிபெற்ற திருச்சபை ஆகியவை வெவ்வேறு நிலைகளில் இருக்கின்ற இயேசு கிறிஸ்துவின் ஒரே திருச்சபையின் வேறுபட்ட முகவங்கள். திருச்சபை முழுவதும் ஒருசேர, அதன் வேறுபட்ட மூன்று நிலைகளில் இருக்கிறதே, நமது நம்புகைகளில் காணப்படும் “புனிதர்களின் உறவு ஒன்றிப்பு” ஆகும்.

2. இந்த பல ஆன்மாக்களின் விசுவாசம் மற்ற மக்களுக்கு அவர்களின் மண்ணக வாழ்நாள் முழுவதும் தூண்டுதலாக இருக்கிறது, அவர்கள் இறந்த பிறகும் மக்கள் தொடர்ந்து அவர்களது பரிந்துரையை நாடுவதற்குத் திருச்சபை அனுமதித்துள்ளது. இது சிறப்பாக, ஒரு குறிப்பிட்ட ஆன்மா பேறுநிறை காட்சியை அடைந்துள்ளது என்பதை விசாரணை செயல்மை வழியாக திருச்சபை ஏற்கெனவே உறுதி செய்திருந்தால் உண்மையாகும். இந்த ஆன்மாக்கள் புனிதர்கள் என்று அழைக்கப்படுகின்றனர்.

3. நம்மிடம் இருந்து விடைபெற்ற சகோதர சகோதரிகள் விண்ணத்தில் கிறிஸ்துவின் ஆட்சியில் கடவுளோடு உள்ளனர், அவர் வாழ்வோரின் கடவுள் (மத் 22:32), ஆகவே அவரோடு சிறப்பாக நெருக்கமான உறவுநிலையை அனுபவிக்கின்றனர். உண்மையில், இவ்வுலகின் சோதனைகள் ஊடாக இன்னும் போராடிக் கொண்டிருக்கும் கிறிஸ்தவர்கள் புனிதர்களாக இருக்கின்றனர் என்பதை இது மறுக்கவில்லை, ஏனெனில் நாம் தற்போதும் கடவுளின் பிள்ளைகளாக இருக்கிறோம். ஆனால் புதிய வாழ்வில், நாம் கடவுளைப் போன்று இருப்போம் (1யோவா 3:2).

விண்ணகத்தில் உள்ள புனிதர்களின் வாழ்வும் விசுவாசமும் நமது மனித வலுவின்மைகளின் ஊடாக ஒளிரும் கடவுளின் தூயநிலையின் நிறைவினைக் காட்டுகிறது. அவர்களின் நன்மைத் தனத்தைத் தியானிப்பதிலும் மதிப்பதிலும், நாம் கடவுளின் தூயநிலையை நாம் சிறப்பாக அறிந்து வணங்குகிறோம். இந்த புனிதர்களின் புண்ணியங்களை நினைவுக்குக் கொணர்வது கடவுளின் அனைத்தையும் உள்ளடக்கிய நன்மைத்தனத்தை நன்றாகப் பாராட்ட நமக்கு உதவுகிறது. அவர்கள் தங்களது விசுவாசப் பயணத்தை வெற்றிகரமாக முடித்துள்ளதால் நாம் அவர்களை உயர் மேன்மையிலும் போற்றுதலிலும் நாம் வைக்கிறோம், மேலும் அவர்களைப் போன்று மாற விரும்புகிறோம். நமது புனிதர்கள் வணக்கத்தில், கிறிஸ்தவ நம்பகத்தன்மையின் ஆழ்ந்த மாதிரிகளாக நாம் அவர்களைப் போற்றுகிறோம், நமக்காக அவர்களது நிலையானப் பரிந்துரைகளை வேண்டுகிறோம். கடவுளை வழிபடுதலில் செபமும் அடங்கியுள்ளது, ஆனால் புனிதர்களிடம் செபிக்கிறோம் என்பதாலே நாம் அவர்களை வழிபடுகிறோம் என பொருளாகாது.

4. மறைநூல் குறிப்பிடுவது போன்று, விண்ணகத்தில் இருக்கிறவர்கள் மண்ணகத்தில் இருக்கிறவர்களின் செபங்களை அறிந்திருக்கின்றனர். எடுத்துக்காட்டாக, திருவெளிப்பாடு 5:8ல் நாம் இதைக் காணலாம். “இருபத்து நான்கு மூப்பர்கள் (விண்ணகத்தில் இறைமக்களின் தலைவர்கள்) ஆட்டுக்குட்டியின் முன்பு வீழ்ந்தனர், ஒவ்வொருவரும் யாழும் சாம்பிராணி நிறைந்த பொற்கிண்ணங்களும் வைத்திருந்தனர், அவை புனிதர்களின் (இறைமக்களின்) செபங்களாக இருந்தன” என்பதை யோவான் காண்கிறார். விண்ணகத்தில் உள்ள புனிதர்கள் நமது செபங்களை கடவுளிடம் செலுத்துகின்றனர் எனில், அவர்கள் நமது செபங்களை அறிந்திருக்க வேண்டும். அவர்கள் நமது விண்ணப்பங்களை அறிந்திருக்கின்றனர், மேலும் நமக்காகப் பரிந்துபேசி கடவுளிடம் அவற்றை வழங்குகின்றனர்.

5. நாம் வாழ்வில் பிரச்சனைக்களைச் சந்திக்கும் பொழுது, ஒரு நெருக்கமான நண்பர் அல்லது உறவினரிடம் நமக்காக செபிக்குமாறு கேட்பது பொதுவானதாக இருக்கிறது. நமக்காகவும் நமது தேவைகளுக்காகவும் செபிக்குமாறு நாம் மக்களிடம் கேட்பதும், நாம் அவர்களுக்காகச் செபிப்பதும் மிக நல்லது. புனிதர்களிடம் செபித்தல் என்பது நமது நண்பர்களை நமக்காகச் செபிக்கக் கேட்பது போன்றதாகும். உண்மையில், நாம் இயேசுவிடம் செபிக்கிற வேளையில், நமது நண்பரும் நம்மோடு செபிக்கிறார். அவர்களின் செபம் தேவையில் இருக்கிறவர் மட்டும் பயனடைய உதவுவதில்லை, செபிக்கிற நபரும் அதனால் பயனடைகிறார்: அது நம் எல்லாரையும் கிறிஸ்துவோடும் ஒருவர் மற்றவரோடும் நெருக்கமான ஒன்றிப்புக்குள் இழுக்கிறது.

ஆனால் நமது நண்பர்களை நமக்காகச் செபிக்கக் கேட்பதை விடவும், ஒரு புனிதரை நமக்காகச் செபிக்கக் கேட்பது மிக மேலானது. ஏனெனில் அவர்கள் ஏற்கெனவே நிறைவான நிலையில் இருக்கின்றனர், நமது செபங்களையும் மண்ணகத்தில் உள்ள மற்ற மக்களின் செபங்களையும் விட நமக்கான அவர்களது செபங்கள் மிக நிறைவானவை.

6. புனிதர்கள் என்போர் கடவுளின் அருளில் இறந்த நமது உடன் கிறிஸ்தவர்கள், கடவுளோடு நெருக்கமாக ஒன்றித்து, தற்போது கடவுளுக்கு முன்பு நேருக்கு நேர் நிற்கின்றனர். கடவுள் அவர்களால் மிகுந்த மகிழ்ச்சி அடைந்துள்ளார், அதனால், அவர் அவர்கள் விண்ணப்பங்களை நிறைவேற்ற சிறப்பான விருப்பம் கொண்டுள்ளார், ஏனெனில் அவர்களின் விண்ணப்பங்கள் நேர்த்தியானவை.

புனிதர்களின் விசுவாசமும் பக்தியும் நமது சொந்த வலுவின்மைகளில் உதவவும், நமது விசுவாசத்திலும் பக்தியிலும் குறைவுபடுவதை வழங்கவும் முடியும். இயேசு வழக்கமாக ஒரு நபருக்கு மற்றொரு நபரின் விசுவாசத்தின் அடிப்படையில் உதவுகிறார் (காண்க மத் 8:13, 15:28, 17:15-18; மாற் 9:17-29; லூக் 8:49-55). கடவுள் நேர்மையாளரின் செபங்களுக்கு தனிப்பட்ட விதத்தில் பதிலளிக்கிறார். புனித யாக்கோபு அறிவிக்கிறார், “நேர்மையான மனிதரின் செபம் பயனளிப்பதில் மிகுந்த வல்லமையுள்ளது” (யாக் 5:16-18). விண்ணகத்தில் உள்ள கிறிஸ்தவர்கள் அதிக நேர்மையாளர்களாய் இருக்கின்றனர், ஏனெனில் மண்ணகத்தில் உள்ள எவரை விடவும், அவர்கள் கடவுளின் நிகழ்மையில் நிற்பதற்காக நேர்த்தியாக்கப் பெற்றுள்ளனர் (எபி 12:22-23), இதன் பொருள் அவர்களின் செபம் மிக அதிகப் பயனளிக்கும் என்பதாகும்.

7. சில மனிதர்கள் கேட்கலாம், நாம் ஏன் “அதற்கு பதில் இயேசுவிடம் நேரடியாகச் செல்லக் கூடாது”. ஒருவர் மற்றவருக்காக செபித்தல் என்பது கிறிஸ்தவர்களின் செயலின் எளியப் பகுதியாகும், மேலும் கிறிஸ்தவக் கடமையாகவும் இருக்கிறது. 1 திமொத்தேயு 2:1-4ல், புனித பவுல் வேறுபட்டப் பல விடயங்களுக்காகப் பரிந்து செபிக்க கிறிஸ்தவர்களை உறுதிபட ஊக்குவிக்கிறார், மேலும் அந்த பத்தியானது அவரது எழுத்துகளில் தனித்துவமானது அன்று. அவரது மற்ற மடல்களில், புனித பவுல் தமக்காகச் செபிக்குமாறு மற்றவர்களிடம் நேரடியாகக் கேட்கிறார் (உரோ 15:30-32, எபே 6:18-20, கொலோ 4:3, 1தெச 5:25, 2தெச 3:1), மேலும் தாம் அவர்களுக்காக செபிப்பதாகவும் அவர்களுக்கு அவர் உறுதியளிக்கிறார் (2தெச 1:11). நம்மிடம் கேட்பவருக்காக மட்டுமின்றி, பிறருக்காகச் செபிக்குமாறு இயேசு தாமே நம்மைக் கோருகிறார் (மத் 5:44).

8. புனிதர்களுடனான நமது உறவுநிலை தொடர்பாக, *லத்ரியா* (கடவுளுக்கான ஆராதனை) மற்றும் *துலியா* (புனிதர்களுக்கான வணக்கம்) என்ற லத்தீன் வார்த்தைகளைத் திருச்சபை வேறுபடுத்திக் காட்டுகிறது. *துலியா* என்றப் பதம் மனிதர்களுக்கான மதிப்பளித்தலைச் சுட்டுகிறது, சிறப்பாக கடவுளுடனான நட்புறவில் வாழ்ந்து இறந்தவர்களுக்கு - மற்ற

வார்த்தையில், புனிதர்களுக்கு. இந்த தனிநபர்களுக்கு உரிய மதியாதையை மறைநூல் சுட்டுகிறது (மத் 10:41).

ஒரு சிறப்பு பதம், *ஹைப்பர்துலியா* என்பது இயேசுவை – உடலேற்ற கடவுளை – தமது கருப்பையில் சுமந்த கன்னி மரியாவுக்கு அளிக்கப்படும் சிறப்பு மரியாதையைச் சுட்டப் பயன்படுகிறது. மற்றப் புனிதர்களுக்கு வழங்கப்படும் *துலியா* என்பதை விட, கிறிஸ்துவின் சொந்த தாய் என்பதற்கான கூடுதல் மரியாதையை *ஹைப்பர்துலியா* என்ற பதம் குறிக்கிறது. இது பெரிய பட்டம் என்றாலும், புனிதர்களுக்கு வழங்கப்படும் அதே வகையைச் சார்ந்தது. எவ்வாறெனினும், மரியா ஒரு முடிவுள்ள படைப்புயிரியாக இருக்கிறதால், அவருக்குரிய மரியாதை, அடிப்படையில் முடிவற்றப் படைப்பாளருக்கு உரித்தான *லத்ரியா* என்பதில் இருந்து வேறுபட்ட வகையாகும்.

கடவுளோடும் புனிதர்களோடும் நாம் தொடர்புபடுத்தும் வேறுபாடு பட்டத்தைச் சார்ந்தது அன்று, ஆனால் வகையைச் சார்ந்தது. கடவுளோடு திருச்சபை கொண்டுள்ள உறவுநிலை வகையும், புனிதர்களோடு திருச்சபை கொண்டுள்ளதும் முற்றிலும் வேறுபட்டது. கத்தோலிக்க வழிபாட்டின் மையச் செயலான திருப்பலியின் செபங்கள், *லத்ரியா* ஆகும், ஏனெனில் அவை புனிதர்களை அன்றி, கடவுளையும் இயேசுவையும் நோக்கியதாக இருக்கின்றன. *லத்ரியா* என்பது நற்கருணை பலியை உள்ளடக்கியுள்ளது, இதை நாம் மரியாவுக்கோ புனிதர்களுக்கோ செலுத்துவதில்லை. ஆனால் மரியா மற்றும் புனிதர்களிடம், நமக்காக அவர்களது பரிந்துரைகளைக் கேட்கின்ற நமது பக்திசார் செபங்கள், *துலியா* (மரியாவைப் பொருத்தவரை *ஹைப்பர்துலியா*) ஆகும், இவற்றில் நற்கருணை பலி அடங்காது.

(முற்காலத்தில் ‘‘வழிபாடு’’ என்பது புனிதர்கள் வணக்கத்தையும், இறை ஆராதனையையும் குறிக்கும் பொதுத்தன்மையில் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது. தற்போது ‘‘வழிபாடு’’ என்ற பதம் கடவுளுக்கு உரிய ஆராதனை மட்டுமே குறிக்கிறது, சாதாரண வணக்கத்தை அன்று.)

9. நாம் வானதூதர்களையும் வணங்குகிறோம், ஏனெனில் அவர்கள் கடவுளின் விருப்பத்தை நிறைவேற்றத் தங்களையே அர்ப்பணித்துள்ள ஆவிகளாக இருக்கின்றனர். ஆனால் மீண்டும், கடவுளை மட்டுமே ஆராதிக்கும் விதத்தில் நாம் அவர்களை வழிபடுவதில்லை.

*கதிம 352*: ‘‘திருச்சபை தனது மண்ணகத் திருப்பயணத்தில் உதவுகின்ற, ஒவ்வொரு மனிதரையும் காக்கின்ற வானதூதர்களை வணங்குகிறது.’’

இந்த மண்ணத்தில் இருந்து விடைபெற்ற மனிதப் புனிதர்களைப் போன்று உறுதிமுறை புனிதர்கள் இல்லை எனினும், இந்த வானதூதர்களை புனித மிக்கேல், புனித கபிரியேல், அல்லது புனித ரபேல் என்று குறிப்பிடுவது நமக்குப் பொதுவானது. ஆனால் ‘‘புனித’’ என்ற வார்த்தை அடிப்படையில் ‘‘தூய’’ என்று பொருள்படுகிறது, அவர்களைப் ‘‘புனிதர்கள்’’ என்று குறிப்பிடுவதில், அவர்களை நாம் கடவுளின் தூய வானதூதர்கள் என பொருள் கொள்கிறோம்.

10. நமது செபத்தில் நமக்கு உதவுவதற்காக புனிதர்களின் (இருபரிமாண அல்லது முப்பரிமாண) உருவங்களைப் பயன்படுத்துவதும் நம்மிடம் பொது நடைமுறையாக இருக்கிறது. இந்த நடைமுறை திருச்சபையால் பெரிதும் ஊக்குவிக்கப்படுகிறது. படங்கள் மற்றும் திருவுருக்கள் உடல்சார் மெய்மையை விடவும் ஆன்மிக மெய்மையைக் காட்டுகின்றன. இறந்த ஒருவரை நினைவுகூர அவரது ஒளிப்படம் உதவுவது போன்று, புனிதர்களின் படங்களை நோக்குவது அவர்களின் எடுத்துக்காட்டை நினைவுகூர உதவுகிறது. நமது விசுவாசத்தைத் தூண்டும் வழியாக அத்தகைய உருவங்களைப் பயன்படுத்துதல் ஒரு நல்ல விடயமாகும்.

*கதிம 2130*: ‘‘இருந்தபோதிலும், ஏற்கெனவே பழைய ஏற்பாட்டில், உடலேற்ற வாக்கினால் மீட்படைவதை அடையாளப்பூர்வமாகச் சுட்டிக்காட்டுமாறு உருவங்களைச் செய்ய கடவுள் அனுமதித்துள்ளார்: வெண்கலப் பாம்பு, உடன்படிக்கைப் பேழை, மற்றும் கெருபுகள்.’’

*கதிம 2131*: ‘‘உடலேற்ற வாக்கின் மறைபொருளின் அடிப்படையில், நிசேயாவில் (787) நடைபெற்ற ஏழாம் பொதுச்சங்கத்தில் உருவச்சிதைப்பாளர்களுக்கு எதிராக - கிறிஸ்துவின், இறையன்னை, வானதூதர்கள், மற்றும் எல்லா புனிதர்களின்- உருவங்களை வணங்குவதை நியாயப்படுத்தியுள்ளது. உடலேற்பின் வழியாக, உருவங்களின் புதிய ‘அருள்திட்டத்தை’ இறைமகன் அறிமுகப்படுத்தினார்.’’

11. புனிதர்களின் உருவத்தை கடவுளாக எண்ணி வழிபடுவதை, திருச்சபை சிலைவழிபாட்டு பாவம் என்று கண்டிக்கிறது. அதே நேரத்தில், வணக்கத்திற்காக இந்த உருவங்களைப் பயன்படுத்துவது வழிபாட்டுக்கு ஈடாகாது, ஆகவே இது வலுவாக ஊக்குவிக்கப்படுகிறது.

*கதிம 2114*: ''சிலைவழிபாடு என்பது மனிதரின் இயல்பான சமய உணர்வின் நெறிபிறழ்வாகும். 'கடவுள் குறித்த அழிக்கமுடியா தமது கருத்தை கடவுள் அல்லாத ஒன்றுக்கு மாற்றுகிறவரே' ஒரு சிலைவழிபாட்டாளர் ஆவார்.''

*கதிம 2132*: ''கிறிஸ்தவ உருவ வணக்கம், சிலைகளை விலக்கும் முதல் கட்டளைக்கு முரணானது அன்று. உண்மையில், 'ஓர் உருவத்துக்குச் செலுத்தப்படும் மரியாதை அதன் முன்னுருவுக்குச் செல்கிறது', மேலும் 'ஓர் உருவத்தை வணங்குகிற எவரும் அதில் சித்தரிக்கப் பெற்றுள்ள நபரை வணங்குகிறார்'. புனித உருவங்களுக்குச் செலுத்தப்படும் மரியாதை ஒரு 'மதிப்புக்குரிய மரியாதை' ஆகும், கடவுளுக்கு மட்டுமே உரிய ஆராதனை அன்று: சமய வழிபாடு என்பது வெறும் பொருட்களாகக் கருதப்படும் உருவங்களை நோக்கி அன்றி, அவற்றின் தனித்துவ அம்சத்தின் கீழ் உடலேற்ற கடவுளிடம் நம்மை இட்டுச் செல்கின்றன. உருவத்தை நோக்கிய நகர்வு அந்த உருவத்தோடு முடிந்து விடுவதில்லை, அது யாருடைய உருவமோ அவரை நோக்கி அழைத்துச் செல்கிறது.''

12. சில குறிப்பிட்ட விடயங்களை சில குறிப்பிட்ட புனிதர்களுக்குச் சாற்றுவது திருச்சபையில் பொது நடைமுறையாக இருக்கிறது, ஏனெனில் ஒரு குறிப்பிட்ட புனிதர் தமது வாழ்நாளில் ஒரு குறிப்பிட்ட விடயத்தோடு ஏதோ ஒருவிதத்தில் தொடர்பு கொண்டுள்ளார். இவர்கள் புனித புரவலர்கள் என்று அழைக்கப்படுகின்றனர்.

புனித புரவலர்கள் வாழ்வின் பல்வேறு பகுதிகளில் சிறப்பு பாதுகாவலர்களாக அல்லது காப்பாளர்களாகத் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். இவை, தொழில்கள், நோய்கள், ஆலயங்கள், நாடுகள், விடயங்கள் என மனித வாழ்வில் முக்கியமான எதுவாகவும் இருக்கலாம். நான்காம் நூற்றாண்டிலேயே மக்களும் ஆலயங்களும் திருத்தூதர்கள் மற்றும் மறைச்சாட்சிகளின் பெயர்களைப் பெற்றிருந்ததை முற்காலப் பதிவுகள் காட்டுகின்றன, ஆகவே அந்த புனிதர்கள் அந்த மக்கள் அல்லது ஆலயங்களின் புரவலர்கள் ஆயினர். இங்கே சில எடுத்துக்காட்டுகள்:

நற்செய்தியாளர் புனித லூக்கா, ஓவியர்களின் புனித புரவலராக இருக்கிறார்.

புனித திருமுழுக்கு யோவான், திருமுழுக்கின் புனித புரவலராக இருக்கிறார்.

புனித தாமஸ் மூர், வழக்கறிஞர்களின் புனித புரவலராக இருக்கிறார்.

புனித தாமஸ் அக்குவினாஸ், ஆசிரியர்கள் மற்றும் கல்விக் கழகத்தாரின் புனித புரவலராக இருக்கிறார்.

புனித ஜான் மரி வியான்னி, குருக்களின் புனித புரவலராக இருக்கிறார்.

புனித பிரான்சிஸ் சேவியர், மலாக்கா ஜோகூர் மறைமாவட்டத்தின் புனித புரவலராக இருக்கிறார்.

அமலோற்பவ அன்னை (மரியா), அமெரிக்க ஐக்கிய நாடுகளின் புனித புரவலராக இருக்கிறார்.

ஒவ்வொரு கத்தோலிக்கரும், தமது திருமுழுக்கின் பொழுது, ஒரு புனிதரின் பெயரை ஏற்க ஊக்குவிக்கப்படுகிறார், தமது பெயரின் பொருட்டு அந்த புனிதர் அவரது புனித புரவலராகிறார், அதனால் தமது விசுவாசம் மற்றும் வாழ்வின் பயணம் முழுவதும் தமக்காகச் செபிக்குமாறு அந்த புனிதரை அழைக்கலாம்.

13. மாணவர்களுக்கு ஆர்வமூட்டும் சில புனிதர்களின் வாழ்க்கை கதைகளை அடையாளம் கண்டு, அந்த புனிதர்களின் கதைகளை மாணவர்களுக்குச் சொல்லவும்.

14. திருச்சபையால் ஒரு புனிதராகக் கண்டுணரப்படுவது மிக உயர்ந்த மரியாதை ஆகும். இதன் பொருள் புனிதரின் பெயர் புனிதர்களின் அலுவல்சார் பட்டியலில் சேர்க்கப்பட்டு, அவரது பெயரால் திருப்பலிகள் மற்றும் விழாக்கள் கொண்டாடப்படுகிறது. இந்த புனிதரின் நினைவாக ஆலயங்கள் நேர்ந்தளிக்கப் பெறலாம், மேலும் அவர் பெயரை மன்றாட்டுமாலைகள் உள்ளிட்ட பொது செபங்களிலும் பயன்படுத்தலாம்.

கத்தோலிக்கத் திருச்சபை புனிதர்களை *உருவாக்குவதில்லை* என்பதைக் கவனியுங்கள்; அது கடவுளால் புனிதராக்கப்பட்ட மக்களைக் *கண்டுணர்கிறது*. இந்த அலுவல்சார் செயல்மை திருமுறையேற்பு (புனிதர் பட்டத்திற்கான) செயல்மை என அழைக்கப்படுகிறது. இந்த செயல்மை நான்கு படிகளைக் கொண்டது:

அ) *திருமுறையேற்புக்கான கோரிக்கை*. (திருத்தந்தையால் சிறப்பு விலக்கு அளிக்கப்படாத நிலையில்) ஒரு நபர் இறந்து ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு, அவரைப் புனிதர்நிலைக்கு கருத்தில் கொள்ளுமாறு முறையான கோரிக்கை விடுக்கப்படுகிறது. இந்த கோரிக்கையை வழக்கமாக வேட்பரின் ஆலயம் அல்லது துறவறக் குழுமத்தைச் சார்ந்த மக்கள் விடுப்பர். அந்த நபர் இறந்த மறைமாவட்டத்தின் ஆயரிடம் அவர்கள் தங்களது கோரிக்கையை அளிக்கின்றனர். அந்த நபர் எவ்வாறு தூய வாழ்வு வாழ்ந்தார் மற்றும் புனிதர்நிலைக்கான வேட்பராக அவரைக் கருத்தில் கொள்வதற்கான காரணங்களின் பட்டியலை இந்த கோரிக்கை கூறுகிறது. இந்த நபரை புனிதர்நிலைக்கு கருத்தில் கொள்வதற்கு போதியச் சான்று இருக்கிறதாக ஆயர் நம்பினால், சிறப்பு தீர்ப்பாயம் திறக்க வத்திக்கானிடம் அவர் அனுமதி கேட்கிறார். வேட்பரின் நன்மைத்தனம், தூயநிலை, கடவுளிடம் பக்தி, மற்றும் பிற புண்ணியங்களுக்கு சான்றொப்பம் வழங்க சாட்சிகளை அழைக்கிறார். ஒரு நபர் இந்த படியைக் கடந்துவிட்டால், அவர் ''இறை ஊழியர்'' என பெயர் பெறுகிறார்.

ஆ) *தீர்மானித்தல்*. ஆயர் முறையான அறிக்கை மற்றும் கோரிக்கையை திருப்பீடத்திற்கு அனுப்புகிறார், அங்கு அது புனிதர்கள் நிலை பேராயத்தால் மீள்பார்வை செய்யப்படுகிறது. ஒன்பது இறையியலாளர்கள் இந்த ஆவணத்தை வாசித்து, முழு பேராயத்திற்கும் அதை அனுப்ப போதிய காரணம் இருக்கிறதா என தீர்மானிக்கின்றனர். அப்படி இருந்தால், வேட்பரின் எழுத்துகள் மற்றும் அவரது வாழ்வின் பிற அம்சங்கள் எதுவும் திருச்சபையின் படிப்பினைகள் மற்றும் நடைமுறைகளுக்கு எதிராகச் செல்லவில்லை என்று உறுதிப்படுத்த ஆராய்கின்றனர். இந்த விசாரணையின் ஒரு பகுதியாக ''அலகையின் வழக்கறிஞர்'' என அழைக்கப்படும் ஒரு நபர், வேட்பரின் புனிதர்நிலையை எதிர்த்துக் கேள்விகளை எழுப்புகின்றனர். இறுதி முடிவை முழுமையாகவும் தெளிவாகவும் உறுதிப்படுத்த இது செய்யப்படுகிறது, வேட்பரின் புனிதத் தன்மைக்கான எல்லா சான்றும் உறுதி செய்யப்படுகிறது. ஒரு வேட்பர் தமது விசுவாசத்தில் புண்ணியத்துவமும் வீரத்துவமும் கொண்டிருந்தார் என்பது தீர்மானிக்கப்பட்டால், அவர் ''வணக்கத்துக்குரியவர்'' என அறிவிக்கப்படுகிறார்.

இ) *பேறுநிலையேற்பு*. அடுத்தப் படியாக பேறுநிலையேற்பு இருக்கிறது. வேட்பர் ஒரு மறைச்சாட்சியாக, தமது விசுவாசத்திற்காக இறந்த ஒருவராக இருந்தால், அவரது பேறுநிலை ஏற்கப்பட்டு ''பேறாளர்'' (அருளாளர்) என்று பெயர் பெறுகிறார். மற்றபடி, வேட்பரின் பரிந்துரை வழியாக நிகழ்ந்த ஓர் அற்புதம் கொணரப்பட்டு, பேராயத்தால் உறுதி செய்யப்பட வேண்டும். அந்நபர் ''பேறாளர்'' என்று பெயர் பெற்றதும், அவரது ஊர், மறைமாவட்டம், மண்டலம், அல்லது துறவறக் குழுமத்தில் அவருக்கு வணக்கம் செலுத்தலாம், அல்லது அலுவல்சார் மரியாதை அளிக்கலாம்.

ஈ) *திருமுறையேற்பு*. பேறுநிலையேற்புக்கு பிறகு, அந்நபரை திருமுறையேற்பு செய்து அலுவல் பூர்வமாக ஒரு புனிதராக அறிவிக்க மற்றோர் அற்புதம் தேவைப்படுகிறது. மீண்டும் ஒருமுறை, அந்நபரின் பரிந்துரையின் விளைவாக ஓர் அற்புதம் நிகழ்ந்திருக்க வேண்டும். பேராயத்தின் தலைவர் திருமுறையேற்புக்கான காரணத்தை திருத்தந்தைக்கு அனுப்புகிறார், அவர் இறுதி முடிவெடுக்கிறார். அந்நபர் திருமுறையேற்பு செய்யப்பட்டதும், அவர் அலுவல்பூர்வமாக ஒரு புனிதராக அறிவிக்கப்படுகிறார். இதை, புதிய புனிதரின் மாண்புக்கான சிறப்புத் திருப்பலியில் திருத்தந்தை அலுவல்சார் விதத்தில் அறிவிக்கிறார்.

15. அலுவல்பூர்வமாக திருமுறையேற்பு செய்யப்பட்ட புனிதர்கள் மட்டுமே திருச்சபையின் புனிதர்கள் இல்லை என்பதை அறிவது முக்கியமானது. இவ்வுலக வாழ்வில் இறந்து பேறுநிறை காட்சியைப் பெற்ற எல்லாருமே புனிதர்களாக இருக்கின்றனர். இதன் காரணமாகவே ஒவ்வோர் ஆண்டும் நவம்பர் 1ந்தேதி அனைத்து புனிதர்கள் பெருவிழாவைத் திருச்சபை கொண்டாடுகிறது.

16. உண்மையில், நாம் நல்ல கத்தோலிக்க வாழ்வு வாழ்வதில் நிலைத்திருந்தால் நாமும் புனிதர்நிலையில் இணைந்திருக்கிறோம். புனிதர்நிலை என்பது ஒவ்வொரு கிறிஸ்தவரும் அடைய விரும்புகிற ஒன்றாக இருக்கிறது. இதன் காரணமாக, தூய வாழ்வு வாழ்வதற்கான மேன்மைமிகு புண்ணியங்களை நாடுவதில் நமது வாழ்வைச் செலவிட திருச்சபை நம்மை அழைக்கிறது.

17. புண்ணியங்கள் என்பவை கடவுளிடமிருந்து வரும் கொடைகள், அவை நம்மை அவரோடு நெருக்கமான நட்புறவு கொள்ளச் செய்கின்றன. அவை நிலையாக நடைமுறையாக்கப்பட வேண்டிய பழக்கங்கள் ஆகும், அவற்றை நாம் புறக்கணித்தால் அவை குறைந்து போகலாம்.

*கதிம 1803*: ஒரு புண்ணியம் என்பது நன்மை செய்வதற்கான பழக்கமுறை மற்றும் உறுதியான நற்பண்பாகும். அது ஒரு நபர் நற்செயல்கள் செய்வதற்கு மட்டுமின்றி, தம்முடைய சிறந்ததைக் கொடுக்கவும் அனுமதிக்கிறது. புண்ணியத்துவ நபர் தமது உணர்வுசார் மற்றும் ஆன்மிக ஆற்றல்கள் எல்லாவற்றிலும் நன்மையை நோக்கிச் செல்கிறார்; அவர் நன்மையைப் பின்பற்றி, உறுதியான செயல்களில் அதைத் தேர்ந்தெடுக்கிறார். 'புண்ணியத்துவ வாழ்வின் இலக்கு கடவுளைப் போன்று மாறுவதாகும்.'''

*கதிம 1811*: ''கிறிஸ்துவின் மீட்பின் கொடையானது புண்ணியங்களில் நிலைத்திருக்கத் தேவையான அருளை நமக்கு வழங்குகிறது. ஒவ்வொருவரும் இந்த ஒளி மற்றும் வலிமையின் அருளுக்காக எப்பொழுதும் கேட்க வேண்டும், அடிக்கடி அருளடையாளங்கள் பெற வேண்டும், தூய ஆவியாரோடு ஒத்துழைக்க வேண்டும், மேலும் நல்லதை விரும்பவும் தீயதை ஒதுக்கவுமான அவரது அழைப்புகளைப் பின்பற்ற வேண்டும்.''

18. ''உறுதியான மனப்போக்குகள், நிலையான இயற்பண்புகள், அறிவின் பழக்கம்சார் நேர்த்தி மற்றும் நமது செயல்களை நெறிப்படுத்தல், நமது நாட்டங்களை ஒழுங்குப்படுத்தல், பகுத்தறிவு மற்றும் விசுவாசத்திற்கு ஏற்ப நமது நடத்தையை வழிநடத்தல்'' (கதிம 1804) ஆகியவற்றை உருவாக்கும் நமது மனித முயற்சிகளில் நாம் மனிதப் புண்ணியங்களை அடைய முடியும். புண்ணியவாளராக இருக்க முயலும் ஒரு நபர் நன்மையைச் சுதந்திரமாகப் பயிற்சி செய்வார் மேலும் ''அறநெறிசார் நல்ல வாழ்வை நடத்துவதில் மகிழ்ச்சி'' காண்பார். நாம் உருவாக்கும் அன்றாடத் தெரிவுகள் வழியாக புண்ணியத்தோடு வாழ்கையில், நமது அறநெறி ''இறை அன்போடு ஒன்றிக்கும்'' ஆழத்திற்கும் நம்மை இழுத்துச் செல்கிறது.

மனிதப் புண்ணியங்கள் நடுவே, நான்கு மிக முக்கியமானவை, அவை முதன்மை (கார்டினல்) புண்ணியங்கள் என்று அழைக்கப்படுகின்றன. ''கார்டினல்'' என்ற ஆங்கிலப் பதம் ''கீல்'' என்பதன் லத்தீன் சொல்லான *கார்தோ* என்பதில் இருந்து வந்தது. இதன் பொருள் இந்த நான்கு முதன்மை புண்ணியங்களையும் பற்றிக் கொள்கிற அல்லது சார்ந்திருக்கிற நிலையில் மற்றப் புண்ணியங்கள் இருக்கின்றன என்பது இதன் பொருளாகும் (கதிம 1805). ஏனெனில் அவை மனிதப் புண்ணியங்களாக இருக்கின்றன, நல்ல வளர்ப்பினாலும் ஒழுக்கத்தினாலும் அவற்றை அடைய முடியும்.

19. முன்மதி, நீதி, துணிவு, தன்னடக்கம் ஆகியவை நான்கு முதன்மை புண்ணியங்களாகும்.

*கதிம 1806*: ''*முன்மதி* என்பது ஒவ்வொரு சூழ்நிலையிலும் நமது உண்மை நன்மையைத் தெளிதேர்வதற்கான நடைமுறைக் காரணத்தை வழங்குகிற மற்றும் அதை அடைவதற்கு சரியாக வழிகாட்டும் புண்ணியமாகும்; 'முன்மதியுள்ள மனிதர் அவர் செல்லும் இடத்தை நோக்குகிறார்.' 'உங்கள் செபங்களுக்கேற்ப நல்லறிவும் நிதானமும் வழங்குகிறது.' முன்மதி என்பது 'செயலில் சரியான காரணமாக' இருக்கிறது என்று அரிஸ்டாட்டிலைப் பின்பற்றி புனித தாமஸ் அக்குவினாஸ் எழுதுகிறார். நடுக்கம் அல்லது அச்சத்தோடோ, வஞ்சகம் அல்லது பாசங்கோடோ இதைக் குழப்பிக்கொள்ளக் கூடாது. இது *அவ்ரீகா விர்த்தூத்தும்* (புண்ணியங்களின் தேரோட்டி) என்று அழைக்கப்படுகிறது; இது விதியும் அளவீடும் அமைத்து மற்றப் புண்ணியங்களை வழிநடத்துகிறது. முன்மதியே மனச்சான்றின் தீர்ப்பை உடனடியாக வழிநடத்துகிறது. முன்மதியுள்ள மனிதர் இந்த தீர்ப்புக்கு ஏற்ப தமது நடத்தையைத் தீர்மானித்து நடத்துகிறார். இந்த புண்ணியத்தின் உதவியால் நாம் குறிப்பிட்ட விடயங்களில் அறநெறிக் கொள்கைகளை வழுவின்றிச் செயல்படுத்தி, அடைய வேண்டிய நன்மை மற்றும் தவிர்க்க வேண்டியத் தீமை குறித்த ஐயங்களை வெல்ல முடியும்.''

*கதிம 1807*: “நீதி என்ற அறநெறிசார் புண்ணியம், கடவுள் மற்றும் அடுத்திருப்பவருக்கு கொடுக்க வேண்டியதை நிலையான மற்றும் உறுதியான விருப்பத்தில் அடங்கியுள்ளது. கடவுளை நோக்கிய நீதியானது ‘சமயப் புண்ணியம்’ என்று அழைக்கப்படுகிறது’. மனிதரை நோக்கிய நீதியானது ஒவ்வொருவரின் உரிமைகளை மதிக்கச் செய்கிறது மேலும் மனிதர்கள் மற்றும் பொது நன்மை சார்ந்த தகைநிலையை வளர்த்தெடுக்கும் இணக்கத்தை மனித உறவுநிலைகளில் நிறுவுகிறது. அடிக்கடி புனித மறைநூல்களில் குறிப்பிடப்படும் நேர்மையான மனிதர், பழக்கமான சரியான சிந்தனை மற்றும் தமக்கு அடுத்திருப்பவருடனான தமது நடத்தையில் நேர்மையால் வேறுபடுத்தப்படுகிறார். நீங்கள் ஏழைகளிடம் பாகுபாடாக அல்லது பெரிதும் வேறுபட்ட விதத்தில் நடக்கக்கூடாது, உங்களுக்கு அடுத்திருப்பவரை நேர்மையுடன் தீர்ப்பிடுங்கள்.’ ‘தலைவர்களே, நீங்களும் விண்ணகத்தில் ஒரு தலைவரைக் கொண்டுள்ளீர்கள் என்பதை அறிந்தவர்களாய், உங்கள் அடிமைகளை நீதியுடனும் நன்றாகவும் நடத்துங்கள்.’”

*கதிம 1808*: “துணிவு என்ற அறநெறிசார் புண்ணியம் இடர்பாடுகளில் உறுதிநிலை மற்றும் நன்மைக்கான நாட்டத்தின் நிலைத்தன்மையை உறுதி செய்கிறது. சோதனைகளைத் தடுக்க மற்றும் அறநெறி வாழ்வுக்கான தடைகளை வெல்லும் முடிவினை வலுப்படுத்துகிறது. துணிவு என்ற புண்ணியம் அச்சத்தை, இறப்பின் மீதான அச்சத்தையும் வெல்லவும், சோதனைகள் மற்றும் துன்புறுத்தல்களைச் சந்திக்கவும் ஒருவரை இயல்கிறவராக்குகிறது. இது நீதியானதைப் பாதுகாக்க, ஒருவர் தமது வாழ்வை மறுக்கவும் பலியாக்கவும் செய்கிறது. ‘ஆண்டவரே எனது வலிமையும் எனது பாடலுமாக இருக்கிறார்.’ ‘இந்த உலகில் உங்களுக்குத் துன்பம் உண்டு; ஆனால் நல்ல மகிழ்வோடு இருங்கள், நான் இந்த உலகை வெற்றிகொண்டு விட்டேன்.’”

*கதிம 1809*: “தன்னடக்கம் என்ற அறநெறிசார் புண்ணியம், இன்பங்கள் மீதான ஈர்ப்பினை மிதப்படுத்தி படைக்கப்பட்ட நன்மைகளின் பயன்பாட்டில் சமநிலையை வழங்குகிறது. இது உள்ளுணர்வு மீதான விருப்பத்தின் ஆளுமைத்திறனை உறுதி செய்து, மாண்புக்குரிய வரம்புகளுக்குள் ஆசைகளைக் கட்டுப்படுத்துகிறது. தன்னடக்கமுள்ள நபர் உணர்வுசார் வேட்கைகளில் நன்மையானதை நோக்கி நடத்தி, நலமான தேர்வுரிமையைப் பேணுகிறார்: ‘உன் நாட்டத்தையும் வலிமையையும் பின்தொடராதே, உன் இதயத்தின் ஆசைகளுக்கு ஏற்ப நடக்காதே.’ தன்னடக்கம் அடிக்கடி பழைய ஏற்பாட்டில் புகழப்பட்டுள்ளது: ‘உன் கீழ்நிலை ஆசைகளைப் பின்பற்றாதே, உன் வேட்கைகளைக் கட்டுப்படுத்து.’ புதிய ஏற்பாட்டில் இது ‘மிதநிலை’ அல்லது ‘நிதானம்’ என்று அழைக்கப்படுகிறது. நாம் ‘இந்த உலகில் நிதானமாகவும், நேர்மையோடும், கடவுளுக்குரிய வாழ்வையும் வாழ’ வேண்டும்.”

கதிம 1809 பின்வருமாறு இந்த முதன்மை புண்ணியங்களை எல்லாம் ஒருசேரக் கொணர்கிறது: “நன்றாக வாழ்தல் என்பது ஒருவரது முழு இதயத்தோடும், முழு ஆன்மாவோடும், முழு ஆற்றலோடும் கடவுளை அன்பு செய்வதைத் தவிர வேறில்லை; இதிலிருந்து அன்பு என்பது முழுமையாகவும் சிதைவுறாததாகவும் (*தன்னடக்கத்தின்* வழியாக) வைத்திருக்கப்பட வேண்டும் என தெளிவாகிறது. எந்த கெடுநிலையும் அதை இடையூறு செய்ய முடியாது (இது *துணிவு*). அது கடவுளுக்கு மட்டுமே கீழ்ப்படிகிறது (இது *நீதி*), மேலும் விடயங்களைத் தெளிதேர்வதில் கவனமாக இருக்கிறது, அதனால் வஞ்சகம் அல்லது மோசடியால் வியப்பளிக்க முடியாது (இது *முன்மதி*).”

இந்த புண்ணியங்கள் மனித முயற்சிகளால் பண்படுத்தப்பட வேண்டும் என்றாலும், ஒருவேளை அடிக்கடி தோல்வியைத் தொற்றிக் கொண்டாலும், நமது தொடர்ச்சியான முயற்சிகள் “இறை அருளால் உயர்த்தப்படும்”. நம் மனித முயற்சிகளில் கடவுள் உதவுவார் என்பது இதன் பொருளாகும் (கதிம 1810).

20. மனிதப் புண்ணியங்கள் இறையியல் புண்ணியங்களில் இருந்து வருகின்றன. இறையியல் புண்ணியங்கள் என்பவை கடவுளைப் போன்று மாறுவதற்கான நமது திறனை ஊக்குவிக்கும் புண்ணியங்களாகும். ஏனெனில் இந்த புண்ணியங்கள் நேரடியாக கடவுளோடு ஒன்றிக்க நமக்கு உதவுவதால் அவை அவரோடு தொடர்பு கொண்டுள்ளன. “அவை ஒரே மூவொரு கடவுளைத் தங்கள் தொடக்கம், நோக்கம், மற்றும் இலக்காகக் கொண்டுள்ளன” (கதிம 1812). மற்ற வார்த்தைகளில், இறையியல் புண்ணியங்கள் கடவுளால் வழங்கப்பட்டவை, மேலும் அவை நம்மை அவரிடம் இட்டுச் செல்கின்றன.

*கதிம 1813*: ‘‘இறையியல் புண்ணியங்கள் என்பவை கிறிஸ்தவ அறநெறி செயல்பாட்டுக்கு அடித்தளமாக இருக்கின்றன; அவை அதற்கு உயிர்ப்பூட்டி, அதற்கு அதன் சிறப்பு பண்பை வழங்குகின்றன. அவை எல்லா அறநெறி புண்ணியங்களுக்கும் தகவலளித்து வாழ்வு கொடுக்கின்றன. விசுவாசிகள் கடவுளின் பிள்ளைகளாகச் செயல்படும் திறன்பெறவும் நித்திய வாழ்வை அடையவும், அவர்களின் ஆன்மாக்களுக்குள் அவை கடவுளால் உட்பதிக்கப் பெற்றுள்ளன. மனிதர்களின் செயல்திறத்தில் அவை நிகழ்மையின் அடைமானமாகவும் தூய ஆவியாரின் செயல்பாடாகவும் இருக்கின்றன. மூன்று இறையியல் புண்ணியங்கள் இருக்கின்றன: விசுவாசம், எதிர்நோக்கு, மற்றும் பிறரன்பு.’’

21. *கதிம 1814*: ‘‘விசுவாசம் என்ற இறையியல் புண்ணியத்தால் நாம் கடவுளில் நம்பிக்கை கொள்கிறோம், மேலும் அவர் நமக்குச் சொன்ன மற்றும் வெளிப்படுத்திய, நாம் நம்புமாறு தூய திருச்சபை முன்மொழிகின்ற எல்லாவற்றையும் நம்புகிறோம், ஏனெனில் அவரே உண்மையாக இருக்கிறார். விசுவாசத்தால் ‘மனிதர் சுதந்திரமாக தம் தான்மை முழுவதையும் கடவுளுக்கு அர்ப்பணிக்கிறார்.’ இதன் காரணமாக நம்பிக்கையாளர் கடவுளின் விருப்பத்தை அறியவும் செய்யவும் நாடுகிறார். ‘நேர்மையாளர் விசுவாசத்தால் வாழ்வார்.’ விசுவாசத்தை வாழ்தல் ‘பிறரன்பின் வழியாகச் செயல்படுகிறது.’’’

நாம் விருப்பத்தோடு நமது விசுவாசத்தைக் கைவிடாத வரை, அது நம்மில் மீந்திருக்கிறது. விசுவாசம் என்பது ஒரு நம்பிக்கையின் அறிவுசார் ஏற்பை விடவும் மேலானது. கிறிஸ்துவிலான நமது விசுவாசத்தை சொல்லால் பறைசாற்றுவதுடன் வாழ்வின் வழியாகவும் கொள்வது போல, அது எப்பொழுதும் செயலோடு (‘‘பணிகள்’’ என்றும் அழைக்கலாம்) இணைந்திருக்க வேண்டும். அத்தகைய விசுவாசம் நமக்கு துன்புறுத்தல்களையும் இடர்களையும் கொணரலாம், ஆனால் இவ்வாறுதான் துல்லியமாக நாம் சிலுவையில் அறையுண்ட கிறிஸ்துவின் பாதையில் நடக்க அழைக்கப்பட்டுள்ளோம். (காண். கதிம 1815-16)

22. *கதிம 1817*: ‘‘எதிர்நோக்கு என்ற இறையியல் புண்ணியத்தால் நாம் விண்ணக அரசின் மீது ஆசைப்படுகிறோம், நித்திய வாழ்வை நமது மகிழ்ச்சியாகக் கொள்கிறோம், கிறிஸ்துவின் வாக்குறுதிகளில் நமது நம்பிக்கையை வைக்கிறோம் மேலும் நமது சொந்த வலிமையைச் சாராமல், தூய ஆவியாரின் அருளின் உதவியைச் சார்ந்திருக்கிறோம். நமக்கு வாக்களித்தவர் நம்பகமானவர் என்பதால், நம் எதிர்நோக்கைத் தயக்கமின்றி ஒப்புக்கொள்வதில் நாம் நிலைத்திருப்போம்.’ ‘நமது மீட்பர் இயேசு கிறிஸ்து வழியாக அவர் நம்மீது தூய ஆவியை நிறைவாகப் பொழிந்தார், அதனால் நாம் அவரது அருளால் ஏற்புடையோராகி, நித்திய வாழ்வின் எதிர்நோக்கில் உரிமைப்பேறாளர்கள் ஆவோம்.’’’

கடவுளில் எதிர்நோக்கு கொள்தல் நம்மை மகிழ்ச்சியான மக்களாக்குகிறது. வாழ்வு நமக்கு ஊக்கமிழக்கச் செய்வதாக அல்லது மிகக் கடினமாக இருந்தாலும், கடவுளில் எதிர்நோக்கு கொள்வதானது விட்டுக்கொடாமல் இருக்கும் வலிமையை நமக்குத் தருகிறது. ஒரு நாள் நாம் விண்ணகத்தை அனுபவிப்போம், கடவுளை முகமுகமாகக் காண்போம் என்னும் எதிர்நோக்கு, வாழ்வு நமக்கு கடினமாகத் தெரிந்தாலும் மற்ற மக்களை நாம் தொடர்ந்து அன்பு செய்யச் செய்கிறது. இயேசுவின் சீடர்கள் என்ற முறையில், நாம் நமது வாழ்வில் சோதனைகளை எதிர்பார்க்க வேண்டும், ஏனெனில் இதுவே சரியாக இயேசு எடுத்தப் பாதையாக இருந்தது. மேலும் ஒரு நாள் அவரோடு இருப்போம் என்று நாம் எதிர்நோக்கு கொண்டுள்ளதால், வாழ்வின் சோதனைகள் ஊடாக நாம் மனம் தளராதிருக்க முடியும். (காண். கதிம 1818-21)

23. *கதிம 1822*: ‘‘பிறரன்பு என்ற இறையியல் புண்ணியத்தால் எல்லா விடயங்களுக்கும் மேலாக கடவுளை நாம் அவருக்காகவே அன்பு செய்கிறோம், மேலும் கடவுளின் அன்புக்காக நமக்கு அடுத்திருப்பவர்களையும் நம்மைப் போல அன்பு செய்கிறோம்.’’

பிறரன்பு, அல்லது அன்பானது, இயேசு தமது சீடர்களுக்கு வழங்கிய புதிய கட்டளையாக இருக்கிறது (யோவா 13:34). அவரை வெறுத்தோருக்காக அவர் இறந்தது போன்று, நம்மை வெறுக்கின்ற மக்களையும் நாம் அன்பு செய்யுமாறு அவர் வற்புறுத்துகிறார். கடவுளின் கட்டளைகளைக் கடைபிடிப்பதன் வழியாக நாம் கடவுளை அன்பு செய்வதைக் காட்டுகிறோம், அவை எல்லாம் அன்பின் சட்டத்தால் உந்துதல் பெற்றுள்ளன.

பிறரன்பே எல்லா புண்ணியங்களிலும் சிறந்ததாக இருக்கிறது. புனித பவுல் கூறுகிறார், “விசுவாசம், எதிர்நோக்கு மற்றும் அன்பு ஆகிய மூன்றுமே மீந்திருக்கும்; அவற்றில் சிறந்ததாக அன்பே இருக்கிறது” (1கொரி 13:13). பிறரன்பு என்றப் புண்ணியம் மற்ற எல்லா புண்ணியங்களையும் ஒருசேர முழு நேர்த்திக்கு கொணர்கிறது. “அன்பு தன்னிலேயே நமது எல்லா பணிகளின் நிறைவாக இருக்கிறது” என்பதை நினைவுகூருங்கள்” (கதிம 1829).

*கதிம 1827*: “எல்லா புண்ணியங்களின் நடைமுறையும் பிறரன்பால் உயிர்ப்பூட்டலும் தூண்டுதலும் பெறுகின்றன, அவை ‘அனைத்தையும் நேர்த்தியான இசைவில் ஒருசேரப் பிணைக்கிறது’; அது *புண்ணியங்களின் வடிவமாக* இருக்கிறது; அது அவற்றின் நடுவே அவற்றைத் தெளிவாக்கி, வரிசைப்படுத்துகிறது; அது அவர்களின் கிறிஸ்தவ நடைமுறையின் ஆதாரமாகவும் இலக்காகவும் இருக்கிறது. பிறரன்பானது நமது அன்பு செய்யும் மனிதத் திறனை உயர்த்திப் பிடித்து, புனிதப்படுத்துகிறது, மேலும் அதை இறையன்பின் மீயியல்பான நேர்த்திக்கு உயர்த்துகிறது.”